**செ. கு. எண்: 044** **நாள் : 07.02.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 7.2.2016

வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி வட்டம், கே.பந்தாரப்பள்ளி கிராமத்தில் இயங்கி வரும் தனியார் பொறியியல் கல்லூரி வளாகத்தில் 6.2.2016 அன்று விண்கல் ஒன்று விழுந்து விபத்து ஏற்பட்டதில், அந்தக் கல்லூரியின் பேருந்து ஓட்டுநர் திரு. காமராஜ் என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. காமராஜின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில், அந்தக் கல்லூரியில் தோட்ட பராமரிப்பாளர்களாக பணியாற்றி வரும் திரு. சசிகுமார், திரு. முரளி மற்றும் மாணவர் திரு. சந்தோஷ் ஆகியோர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க வேலூர் மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த திரு. காமராஜின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், காயமடைந்த திரு. சசிகுமார், திரு. முரளி மற்றும் மாணவர் திரு. சந்தோஷ் ஆகியோருக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**